## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
## வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்
## வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு கருத்திட்டம் (TNSWSP)

# பதவி வெற்றிடங்கள்

எல்லை தாண்டிய வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் முகவரகங்களிடம், வர்த்தகர்கள் தங்களது எல்லை கடந்த வர்த்தகப் பரிமாற்றங்கள் (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள்ஏற்றுமதி) தொடர்பான ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைகளைச் சமர்ப்பிப்பதற்கான ஒற்றை நுழைவாயிலாக, வர்த்தகத்திற்கான தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவ இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம், நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முன்மொழியப்பட்ட வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை அமுலாக்குவதற்கு ஒரு பிரத்தியேக திட்ட அமுலாக்கல் பிரிவிற்கு (PIU) அரசாங்கத் துறை / தனியார் துறையில் சேவையில் உள்ள ஊழியர்களுக்கிடையில் சாரதி மற்றும் அலுவலக வேலை உதவியாளர் பதவிக்கு பொருத்தமான தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 1) சாரதி - PL3-2025 Grade III - 01 பதவி

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

- ➢ இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- ➢ செல்லுபடியாகும் சாரதி உரிமத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- ➢ அரசாங்கத் துறை / தனியார் துறையில் சாரதியாக குறைந்தபட்சம் 04 வருடங்கள் சேவை அனுபவம்.

### 2) அலுவலக வேலை உதவியாளர் – PL1-2025 Grade III - 01 பதவி

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

- ➢ இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- ➢ அரசாங்கத் துறை / தனியார் துறையில் அலுவலக வேலை உதவியாளராக குறைந்தபட்சம் 04 வருடங்கள் சேவை அனுபவம்.

**பொது நிபந்தனைகள்**

I. 2026-05-04ஆம் திகதியில் 55 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

II. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் 2027.09.30 ஆம் திகதி வரை சேர்த்துக் கொள்ளப்படுவர். அரசாங்கத் துறையின் விண்ணப்பதாரர்கள் முழு நேர அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர் என்பதுடன் தனியார் துறை விண்ணப்பதாரர்கள் வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டு அடிப்படையில் வருடாந்த ஒப்பந்தத்தை நீடித்துக்கொள்ளும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர்.

III. 2026-05-04ஆம் திகதியில் அல்லது அதற்கு முன் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாமல் விடும் உரிமையை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

V. இங்கு குறிப்பிடப்படாத அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையின் போது எழும் எந்தவொரு சிக்கல் தொடர்பாகவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதி மற்றும் உறுதியான தீர்மானமாகும்.

2026 மார்ச் மாதம் 28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் மற்றும் ஏனைய அனுகூலங்கள் உரித்தாகும்.

**விண்ணப்பிக்கும் முறை**

இந்த விளம்பரத்தின் பிரகாரம் எமது இணையத்தள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி, விண்ணப்பங்களைத் தயாரித்து, அந்த விண்ணப்பப் படிவம் / சுய தரவுப் படிவம் மற்றும் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளை 2026-05-04ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அனைத்து விண்ணப்பதாரிகளிடமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அரசாங்கத் துறை / அரை அரசாங்கத் துறையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்கள் நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்ப வேண்டும் என்பதுடன் தனியார் துறையின் விண்ணப்பதாரர்கள் தாம் தொடர்பான தகவல்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் (இறுதியாக சேவையாற்றிய இடங்களின் தொழில் வழங்குநராகவிருக்க வேண்டும்) தொடர்புகொள்ளக்கூடிய விபரங்கள் உட்பட ஏனைய ஆவணங்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**முகவரி:**
**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு செயற்றிட்டம்,**
**BMICH,**
**219A, இரண்டாம் மாடி, இரண்டாம் வளவு,**
**பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**

குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர் என்பதுடன் முழுமையற்ற சுய தரவுப் படிவத்தைச் சமர்பித்தல் அல்லது தேவையான சகல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை தகைமையீனமாவதற்கு காரணமாகலாம்.

பதவிகள் தொடர்பான விபரங்கள் உட்பட மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து இந்த இணையதளத்திற்குள் பிரவேசிக்கவும். www.onetrade.lk

**செயலாளர்,**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.**
**2026-04-19ஆம் திகதி.**